**Embassy of the United States of America**
**Colombo**

# PRESS RELEASE

Public Affairs Section
Tel: +94 (1) 249-8100 ● Fax: +94 (1) 244-9070
Email: shenjy@state.gov ● http://lk.usembassy.gov

Release No. 20170119T

## இரணவில நிலையம் மூடப்பட்டமை தொடர்பில் கொழும்பு அமெரிக்கத் தூதுரகத்தின் அறிக்கை

**கொழும்பு, ஜனவரி 19:** இலங்கையுடனான நெருக்கமான உறவையும், 60 ஆண்டு கால எமது இரு தரப்பு பங்காளித்துவத்தையும் அமெரிக்கா மதிக்கின்றது. Broadcasting Board of Governors (BBG) என்ற சுயாதீன அமெரிக்க நிறுவனத்தினால் நிர்வகிக்கப்பட்ட, இரணவில சிற்றலை வானொலி நிலையம் இந்த பங்காளித்துவத்திற்கான ஒரு சிறந்த உதாரணமாகும். வாஷிங்டன் நகரிலிருந்து வொய்ஸ் ஒப் அமெரிக்கா (Voice of America) நிகழ்ச்சிகளை சிற்றலை வானொலி அலைகளின் ஊடாக உலகெங்கிலும் உள்ள ரசிகர்களுக்கு இந்த சிற்றலை நிலையம் கொண்டு சேர்த்தது. செய்திகள், இசை மற்றும் அமெரிக்கா குறித்த விசேட நிகழ்ச்சிகள் இதில் உள்ளடங்கின. உலகிற்கு அமெரிக்காவின் கதைகளை கொண்டு செல்லும் பணிநோக்கத்தினை பல வருட காலமாக இலங்கை அரசாங்கங்களின் ஆதரவின்றி, வொய்ஸ் ஒப் அமெரிக்காவினால் நிறைவேற்றியிருக்க முடியாது.

கடந்த காலங்களில், எவ்வாறாயினும் சிற்றலை ஒலிபரப்புகளுக்கான ரசிகர்கள் குறைந்து வருகின்றனர். செய்திகள் மற்றம் தகவலுக்காக எப்.எம். வானொலிகள் மாத்திரமன்றி, செய்மதி தொலைக்காட்சி சேவை, இணையத்தளங்கள், மற்றும் சமூக ஊடகம் என, கைபேசிகளின் ஊடாக வழங்கப்படும் வேறு மூலங்களை நோக்கி மக்கள் திரும்பி வருகின்றனர். தமக்கு விருப்பமான ஊடகத்தின் வழியாக ரசிகர்களை அடைவதில் BBG என்றும் அர்ப்பணிப்புடன் உள்ளது. ரசிகர்களின் மாறும் பழக்கங்கள் மற்றும் சிற்றலை ஒலிபரப்பு நிலையத்தைச் செயற்படுத்துவதற்கான அதிகரித்த செலவு என்பவற்றின் காரணமாக இரணவிலவில் அமைந்துள்ள நிலையத்தை மூடுவதற்கு BBG தீர்மானித்தது.

இலங்கை அரசாங்கத்திடமிருந்து நீண்ட கால குத்தகையில் பெறப்பட்ட நிலையம் அமைந்துள்ள காணியானது, மீண்டும் அவர்களிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது. வீதிகளை அமைத்தல், காணிகளை துப்பரவு செய்தல் மற்றும் சரி செய்தல், கழிவு வடிகால், வேலிகள் அமைத்தல், மற்றும் நவீன அலுவலகக் கட்டடங்கள் என தமது செயற்பாட்டு காலப்பகுதியில், இரணவிலவை அமெரிக்க அரசாங்கம் மேம்படுத்தியிருந்தது. பொது வசதிகளுக்கான சேவை மையங்களையும், 4.2 மெகா வோட் சுய மின்னுற்பத்தி நிலையத்தையும் அமெரிக்க அரசாங்கம் அமைத்துள்ளது. எதிர்காலத்தில் பல வகிபாகங்களை ஆற்றுவதற்கான உடைமையின் பெறுமதி மற்றும் தளத்தின் நெகிழ்வு திறனை இந்த மேம்படுத்தல் வசதிகள் அனைத்தும் அதிகரித்துள்ளன. அனைத்து முன்னேற்றங்களும் உள்ளடங்கலாக, முழுமையாக இலங்கை அரசாங்கத்திடம் 400 ஏக்கர்களுக்கு அதிகமான இரணவில உடைமைக்கான குத்தகையை மிகுந்த நன்றியுடன் அமெரிக்க அரசாங்கம் மீள அளிக்கின்றது.

வாராந்தம் உலகெங்கிலும் 236.6 மில்லியனுக்கும் அதிகமான மக்களுக்கு, 47 மொழிகளில் நம்பகமான, குறிக்கோள்சார் செய்திகளையும், தகவல்களையும் வொய்ஸ் ஒப் அமெரிக்கா வழங்குகின்றது. சுமார் 75 வருடங்களாக, அமெரிக்க கதைகளை கூறியதுடன், அமெரிக்கா, தமது பிராந்தியம் மற்றும் உலகம் பற்றிய குறிக்கோள்சார் செய்திகளையும் தகவல்களையும் வொய்ஸ் ஒப் அமெரிக்காவின் ஊடகவியலாளர்கள் பகிர்ந்து கொண்டுள்ளனர். வொய்ஸ் ஒப் அமெரிக்கா குறித்த மேலதிக தகவல்களுக்கு: www.voanews.com

# # #